# பெரியாழ்வார் திருமொழி 5-2
## நெய்க்குடத்தை

(தம்மிடத்து எம்பெருமான் திருப்பதிகளிற் போலே
விரும்பிப் புகுந்ததனால் நோய்களை அகலும்படி ஆழ்வார் கூறுதல்)

443 * நெய்க்குடத்தைப் பற்றி * ஏறும் எறும்புகள் போல் நிரந்து * எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் * காலம் பெற உய்யப் போமின் **
மெய்க்கொண்டு வந்து புகுந்து * வேதப் பிரானார் கிடந்தார் *
பைக் கொண்ட பாம்பணையோடும் * பண்டன்று பட்டினம் காப்பே (1)

444 சித்திரகுத்தன் எழுத்தால் * தென்புலக்கோன் பொறியொற்றி *
வைத்த இலச்சினை மாற்றித் * தூதுவர் ஓடி ஒளித்தார் **
முத்துத் திரைக் கடற் சேர்ப்பன் * மூதறிவாளர் முதல்வன் *
பத்தர்க்கமுதன் அடியேன் * பண்டன்று பட்டினம் காப்பே (2)

445 வயிற்றில் தொழுவைப் பிரித்து * வன்புலச் சேவையதக்கி *
கயிற்றும் அக்காணி கழித்துக் * காலிடைப் பாசம் கழற்றி **
எயிற்றிடை மண் கொண்ட எந்தை * இராப்பகல் ஓதுவித்து * என்னைப்
பயிற்றிப் பணி செய்யக் கொண்டான் * பண்டன்று பட்டினம் காப்பே (3)

446 மங்கிய வல்வினை நோய்காள் * உமக்கும் ஓர் வல்வினை கண்டீர் *
இங்குப் புகேன்மின் புகேன்மின் * எளிதன்று கண்டீர் புகேன்மின் **
சிங்கப் பிரானவன் எம்மான் * சேரும் திருக்கோயில் கண்டீர் *
பங்கப்படாது உய்யப் போமின் * பண்டன்று பட்டினம் காப்பே (4)

447 மாணிக்குறள் உருவாய * மாயனை என் மனத்துள்ளே *
பேணிக் கொணர்ந்து புகுத வைத்துக் கொண்டேன் * பிறிதின்றி **
மாணிக்கப் பண்டாரம் கண்டீர் * வலிவன் குறும்பர்கள் உள்ளீர் *
பாணிக்க வேண்டா நடமின் * பண்டன்று பட்டினம் காப்பே (5)

448 உற்றவுறு பிணி நோய்காள் * உமக்கு ஒன்று சொல்லுகேன்

கேண்மின் *
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார் * பேணும் திருக்கோயில் கண்டீர் **
அற்றம் உரைக்கின்றேன் * இன்னம் ஆழ்வினைகாள் * உமக்கு இங்கு ஓர்
பற்றில்லை கண்டீர் நடமின் * பண்டன்று பட்டினம் காப்பே (6)

449 கொங்கைச் சிறுவரை என்னும் * பொதும்பினில் வீழ்ந்து வழுக்கி *
அங்கோர் முழையினில் புக்கிட்டு * அழுந்திக் கிடந்துழல்வேனை **
வங்கக் கடல்வண்ணன் அம்மான் * வல்வினையாயின மாற்றி *
பங்கப் படாவண்ணம் செய்தான் * பண்டன்று பட்டினம் காப்பே (7)

450 ஏதங்கள் ஆயினவெல்லாம் * இறங்கல் இடுவித்து * என்னுள்ளே
பீதகவாடைப் பிரானார் * பிரம குருவாகி வந்து **
போதில் கமல வன்னெஞ்சம் * புகுஉந்தும் என் சென்னித்திடரில் *
பாதவிலச்சினை வைத்தார் * பண்டன்று பட்டினம் காப்பே (8)

451 * உறகல் உறகல் உறகல் * ஒண்சுடர் ஆழியே சங்கே *
அறவெறி நாந்தக வாளே * அழகிய சார்ங்கமே தண்டே **
இறவு படாமல் இருந்த * எண்மர் உலோகபாலீர்காள் *
பறவையரையா உறகல் * பள்ளியறை குறிக் கொண்மின் (9)

452 * அரவத்தமளியினோடும் * அழகிய பாற்கடலோடும் *
அரவிந்தப் பாவையும் தானும் * அகம்படி வந்து புகுந்து **
பரவைத் திரை பல மோதப் * பள்ளி கொள்கின்ற பிரானை *
பரவுகின்றான் விட்டுசித்தன் * பட்டினம் காவற் பொருட்டே (10)